BSNL ஊழியர் சங்கம்

தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:127 **தேதி:-06.09.2016**

08.09.2016 தர்ணா மற்றும் இன்ன பிற செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

ஊழியர்களின் தேங்கிக் கிடக்கும் பிரச்சனைகள் தொடர்பாக 24 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையிலான கூட்டணி அறிவித்துள்ள இரண்டாவது கட்ட இயக்கமான 08.09.2016 அன்று நடைபெற வேண்டிய தர்ணா போராட்டத்தினை வெற்றிகரமாக்கிட மாவட்ட/மாநில சங்கங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்த இயக்கத்தின் செய்திகள் மற்றும் புகைப்படங்களை மத்திய/மாநில சங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும் என மாவட்ட சங்கங்களை மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

DDG(Estt)உடன் சந்திப்பு:- உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், கடந்த காலத்தில் Group C &D ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அதிகப்படியான தொகையினை பிடித்தம் செய்யக் கூடாது என்று DOP&T உத்தரவு வெளியிட்டுள்ளது. அந்த உத்தரவை DOT Endorse செய்யவில்லை என்ற காரணத்தை காட்டி BSNL அந்த உத்தரவை அமுலாக்க வில்லை. BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS மற்றும் துணைத்தலைவர் தோழர் அனிமேஷ் மித்ரா ஆகியோர் 06.09.2016 அன்று திரு S.K.ஜெயின் DDG(Estt) DOT அவர்களை சந்தித்து DOP&Tஉத்தரவை DOT Endorse செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். இதில் தலையிட்டு ஆவன செய்வதாக DDG(Estt) உறுதி அளித்துள்ளார்.

முதல் ஊதிய மாற்றத்தின் போது ஊழியர்களுக்கு ஏற்பட்ட அனாமலிகளின் தீர்விற்கான ஒப்புதலை கோரி BSNL நிறுவனம் DOTக்கு ஏற்கனவே கடிதம் எழுதி உள்ளது. ஓய்வூதியம் சம்பந்தப்பட்டிருப்பதால் இதில் DOTயின் ஒப்புதல் தேவை. ஆனால் இதுவரை DOT எந்த ஒரு முடிவும் எடுக்காமல் உள்ளது. இந்த பிரச்சனையில் விரைவாக தீர்வு காணப்படவேண்டும் என ஊழியர் தரப்பு DDG(Estt) அவர்களை கேட்டுக் கொண்டது. தேவையானவற்றை செய்வதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

20 லட்சத்திற்கும் அதிகமான இணைப்புகளை வழங்கி BSNL மீண்டும் சாதனை:- ஆகஸ்ட், 2016ல் 20 லட்சத்திற்கும் அதிகமான இணைப்புகளை வழங்கி BSNL மீண்டும் சாதனை படைத்துள்ளது. 22,30,000 மொபைல் இணைப்புகள் வழங்க வேண்டும் என ஆகஸ்ட் மாதத்திற்கு இலக்கு நிரணயிக்கப்பட்டுள்ள நிலையில் BSNL நிறுவனம் ஆகஸ்ட் மாதத்தில் 23,07,301 இணைப்புகள் வழங்கி உள்ளது. தமிழகத்தின் இலக்கான 2,05,000த்தை தாண்டி 2,31,371 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இது 113% ஆகும். இந்த சாதனையை நிகழ்த்தி உள்ள ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

BSNLன் புத்தாக்கம் தொடர்பாக BSNL CMDஉடன் தலைவர்கள் சந்திப்பு:- BSNLன் புத்தாக்கம் தொடர்பாக BSNL CMD மற்றும் BSNLல் உள்ள சங்கங்களுக்கும் இடையேயான கூட்டம் 08.09.2016 அன்று மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது. கருவிகளின்

பற்றாக்குறை உள்ளிட்ட முக்கிய பிரச்சனைகள் ஏதேனும் இருப்பின் மத்திய சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

GPFபட்டுவாடாவிற்கான நிதி ஒதுக்கீடு:- 01.09.2016 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் GM (T&BFC) திரு Y.N.சிங் அவர்களை சந்தித்து மாநிலங்களுக்கு GPFக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக விவாதித்தார். உரிய நேரத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று பொது செயலாளர் கேட்டுக் கொண்டார். தேவையானவற்றை செய்வதாக GM உறுதி அளித்துள்ளார்.

PLI:- செப்டம்பர் 1ஆம் தேதி PLI கமிட்டியில் உள்ள ஊழியர் தரப்பு உறுப்பினர்களான தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சந்தேஸ்வர் சிங் ஆகியோர் BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவ்ஸ்தவா அவர்களை சந்தித்து PLI தொடர்பாக விவாதித்துள்ளனர். 24.08.2016 அன்று நடைபெற்ற PLI கமிட்டிக் கூட்டத்தில் நிர்வாக தரப்பு முன்மொழிந்த 1,100 ரூபாய் என்கிற தொகை மிக குறைவாக உள்ளதாக இரண்டு தோழர்களும் எடுத்துரைத்து இந்த பிரச்சனையில் CMDயின் தலையீட்டை கோரினர். இந்த நிறுவனத்தின் புத்தாக்கத்திற்காக, குறிப்பாக கடந்த 2/3 ஆண்டுகளாக ஊழியர்கள் ஆற்றிவரும் சிறப்பான பங்கினை கணக்கில் கொண்டு, நியாயமான ஒரு தொகையை PLIஆக வழங்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர். இந்த பிரச்சனையில் உரிய கவனம் செலுத்துவதாக CMD உறுதி அளித்துள்ளார்.

24.08.2016 அன்று நடைபெற்ற PLI கமிட்டிக் கூட்டத்தில் வருவாய் அதிகரிப்பு மட்டுமே PLI வழங்குவதற்கான அளவீடாக இருக்கும் என்று நிர்வாக தரப்பில் கூறப்பட்டது. 05.09.2016 அன்று நடைபெற்ற PLI கமிட்டிக் கூட்டத்தில் வருவாய் அதிகரிப்பு மட்டுமே அளவீடாக கணக்கில் கொள்ளக் கூடாது என ஊழியர் தரப்பு தெரிவித்தது. அதற்கு பதிலாக மொபைல், தரைவழி மற்றும் ப்ராட்பேண்ட் பகுதிகளில் வழங்கப்பட்ட புதிய இணைப்புகள் ஆகியவையும் அளவீட்டில் கணக்கில் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டனர். நிர்வாகம் மற்றும் ஊழியர் தரப்பிற்கிடையே ஒருமித்த கருத்து உருவாகாத காரணத்தால் இந்த ஆண்டிற்கான PLI தொடர்பாக எந்த ஒரு முடிவும் எட்டபடவில்லை.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
மாநில செயலாளர்